ஹிங்குரக்கொடை பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

ஹிங்குரக்கொடை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹிங்குரக்கொடை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்சச்ல் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது பாதகமான அபிப்பிராயம் வெளியிடப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் அத்தியாயம் 02 ஈ.ஜி 2.7 இன் பிரகாரம் மூலதன செலவின மானியம் ஒரே தடவையில் வருமானத்திற்கு இனங்காணாமல் பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்ட அடிப்படையில் விரிவான வருமான கூற்றிற்கு குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கிடைத்திருந்த மூலதன செலவின மானியங்கள் அனைத்தும் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக. :	இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் அத்தியாயம் 02 ஈ.ஜி 3.8 பிரகாரம் மீளாய்வாண்டில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானதேய்வு விகிதம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	.2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நியமத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் ஈ.ஜி 4.22 இன் பிரகாரம் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தில் நீண்டகால கடன் எடுப்பனவுகளுக்குரிய வட்டி விகிதம், கடன்	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம்

	தொகையின் கால எல்லை, கடன் தொகை பெற்றுக்கொண்ட திகதி, கடன் தொகை செலுத்த வேண்டிய திகதி, கடன் தொகையின் நிபந்தனைகள், நோக்கங்கள் பிணைகள் மற்றும் விசேட விடயங்கள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	அறிக்கையிடல் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் செலுத்த வேண்டிய கடன் மீதிகள் 06 பெறுமதி ரூபா. 485,841 ஆனது நடைமுறை பொறுப்பின் கீழ் வெளிப்படுத்தாமல் நீண்டகால பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	உள்ளுராட்சி மன்ற நிறுவனங் களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	நியமத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் ஈ.ஜி 4.6 பிரகாரம் ஊழியர் கடன் மற்றும் முற்பணத் தொகை உட்பட அனைத்து வகையிலும் பெற வேண்டியவைகளுக்காக நிதி ஏற்பாடு ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டு இருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் ஈ.ஜி 2.7 இன் பிரகாரம் அரசிடம் இருந்தும் ஏனைய உள்ளுராட்சி நிறுவனங்களிடம் இருந்தும் கிடைத்த மற்றும் பெறவேண்டிய ரூபா 73,130,224 ஆன மொத்த மானியமும் தேறிய சொத்துக்கள் / உரிமையின் கீழ் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	வேறாக வங்கி கணக்கொன்று பராமரித்துச் செல்லப்படுவதாக.	சுரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் கிடைத்த மூலதனச் செலவின மானியமான ரூபா. 50,575,362 ஆன விரிவான வருமான கூற்றில் மீண்டு வருபவை அல்லாத செலவினங்களுக்காக அரசிடம் இருந்து கிடைத்த மாற்றல்களின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் மீளாய் வாண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப் பட்டிருந்தது.	வேறாக வங்கி கணக்கொன்று பராமரித்துச் செல்லப்படுவதாக.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கணக்கீடு செய்யப்பட்ட ரூபா. 2,361,466 பெறுமதியான பெறவேண்டிய 09 நிர்மான கடன்பட்டோர் மீதிகள் 77 ஆம் இலக்க	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.

	நாட்குறிப்பு பதிவு மூலம் தவறுதலாக பதிவு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் நிர்மான கடன்பட்டோர் மீதி அந்த அளவினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	.
(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பொறிகளின் தேறிய பெறுமதி ரூபா 6,221,374 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் அப்பெறுமதி ரூபா 5,634,576 ஆக ரூபா 586,798 குறைவாகவும் அட்டவணையின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள முன்புள்ள ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த 04 நிர்மானங்களில் தேறிய பெறுமதி ரூபா 4,789,439 என பதிவு செய்யப்படாததன் பேரில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி ரூபா 5,376,237 குறைத்து நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது.	2025 ஆம் ஆண்டின் சரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.
(உ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மல அகற்றக் கட்டண வருமான ரூபா 186,950 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் சரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக
(ஊ)	மீலாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கழிவுப்பொருள் கட்டண வருமானம் ரூபா 257,496 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் அது ரூபா.136,152 என ரூபா 121,344 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் சரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.
(எ)	மீலாய்வாண்டின் சபை நிதியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 2 செயற் திட்டங்களுக்குரிய உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 672,439 தொகை தவறுதலாக கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் சரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.
(ஏ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரியான நிலுவையாக இருந்த வியாபார நிலையங்கள் மற்றும் கடை வாடகை பெறுமதி ரூபா 6,087,545 ஆக இருந்தபோதும் அது நிதிக் கூற்றுகளில் ரூபா 2,710,124 என ரூபா 3,377,421 தொகை குறைத்து காண்பிக்கப் பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் சரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.
(ஐ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்கள் . / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் திரண்ட மீதி ரூபா. 839,665,878 ஆக இருந்த போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றினை	2025 ஆம் ஆண்டின் சரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.

	சமப்படுத்துவதற்காக திரண்ட மிகை ரூபா. 836,528,402 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் திரட்டிய மிகை ரூபா. 3,137,476 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	
(ஒ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 4 உருப்படிகள் மற்றும் நன்கொடையாக கிடைத்த சக்கர நாற்காலியின் பெறுமதி உட்பட ரூபா 466,254 ஆன ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் நடைமுறை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஓ)	சபை தற்போது பயன்படுத்தப்படுகின்ற முறையாக உள்ள ரூபா 47,299,970 ஆன 310 சொத்து உருப்படிகளின் தேறிய பெறுமதி பூச்சியமாக இருந்த போதும் பயன்பாடு ஆயுட்காலம் திருத்தம் செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஔ)	சபையினால் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளிலும் போதும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 1,206,698 ஆன 07 கடன் கொடுத்தோர் மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(க)	பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டம் (LDSP) ஏற்பாட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட 02 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் இறுதி திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பட்டியல் பெறமதி ரூபா 19,663,476 தொகை நிர்மாண கடன் கொடுத்தோராகவும் பெறவேண்டிய பட்டியல் பெறுமதி ரூபா 13,864,039 தொகை நிர்மாண கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(கா)	.மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப் பட்ட நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 8,023,307 ஆக இருந்த போதும் வீதி பாலங்கள், மதகுகள் 09 மீதிகளும் ரூபா 58,780,245 ஆன பெறுமதியான கட்டிட நிர்மாணங்கள் 04 மீதிகளும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(கி)	மீளாய்வாண்டின் கணக்கீட்டு நியமங்கள் வேறுபாடு ஒன்று இடம்பெறாதிருக்கையில் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் மிகை ரூபா 7,429,138 திரண்ட மிகை அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தமையால் திரண்ட மிகை அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் சுரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.
(கீ)	முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பொழிப்பறிக்கையின் கணக்கீட்டு குறைபாடுகள் அ(i) ரூபா4,488,042 ஆன நிர்மாண கடன் பட்டோர் கூடுதலாக காண்பிக்கப்பட் பெறுமதியை சீராக்கும் போது ரூபா 1,650,098 என தவறுதலாக நிர்மாண கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்ட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் சுரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.
(கு)	நாட்குறிப்பு பதிவுகள் மற்றும் திரண்ட நிதியம் பேரேட்டு கணக்கின் பிரகாரம் முன்னைய காலப்பகுதிகளில் தவறுகளை சீராக்குவதற்காக செய்யப்பட்ட வரவு மற்றும் செலவு வைத்தல்களின் தேறிய பெறுமதி ரூபா 9,607,612 ஆக இருந்த போதும் அது தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ரூபா 29,122,685 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் திரண்ட மிகை ரூபா 19,515,073 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது.	2025 ஆம் ஆண்டின் சுரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.
(கூ)	மீளாய்வாண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமான மற்றும் பெறுமதி ரூபா 21,505,615 என எதிர்மறை பெறுமதி ஒன்றாக இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா. 30,695,031 ஆக இருந்ததால் கூற்றில் ரூபா 52,200,646 ஆக வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் சுரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.
(கெ)	மீளாய்வாண்டின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா. 3,000,000 ஆன நிலையான வைப்புக்களின் பெறுமதி மற்றும் கேள்வி கிடைத்த ஊழியர் கடன் வட்டி ரூபா 347,441 தொகை காசு பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் சுரியாக கணக்கீடு நிதிக் கூற்றுக்கள் செய்யப்பட மூலம் சீராக்கம் வேண்டும். செய்வதாக.

(கே) மீளாய்வாண்டின் போது ரூபா 2,837,034 ஆன ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் நிர்மாண பெறுமதி காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(கொ) காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன வேறுபாட்டின் கீழ் காண்பிக்கப்பட்ட பெறுமதிகள் மற்றும் சொத்துக்கள் பொறுப்பு கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே ரூபா 6,595,738 ஆன வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(கோ) ரூபா 1,613,201 பெறுமதியான 02 கணக்கு மீதிகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ல் உள்ளவாறு 13 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகள் ரூபா 88,704,978 தொகை நிதிக் கூற்றுகளின் மீதிகள் மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் மிதிகளுக்கு இடையே இணக்கம் இன்மை காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகள் மூலம் சீராக்கம் செய்வதாக.	கணக்கீட்டு புத்தகங்கள் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும்.
(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ல் உள்ளவாறு 10 பேரேட்டு கணக்குகளின் மீதிகள் மற்றும் பரீட்சை மீதியின் பிரகாரம் அம்மீதிகளுக்கு இடையே ரூபா 10,639,888 இணக்கமின்மை காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்கம் செய்வதாக.	கணக்கீட்டு புத்தகங்கள் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும்.
(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 17 பேரெட்டு கணக்குகளில் ரூபா 68,317,962 ஆன கூட்டல் பிழைகள் காணப்பட்டதுடன் அத்தவறுகளுடன் பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டு இருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்கம் செய்வதாக.	கணக்கீட்டு புத்தகங்கள் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும்.

1.6.4 அங்கீகாரம் பெறப்பாடத கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் 06 ஆரம்ப மீதிகளில் ஆறு காணப்பட்ட வேறுபாடுகளை சீராக்குவதற்காக மொத்த பெறுமதி ரூபர் 13,842,208	2025 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்கம்	கணக்கு மீதிகளை குறிப்பாக இனங்

தெகைக்காக நாட்குறிப்பு பதிவுகள் இடப்பட்டு சொத்துக்கள் மீதி ஒன்றின் பெறுமதி ரூபா 1,417, 267 ஆல் பதிவழிப்பதற்கும் 03 சொத்து மீதிகளின் பெறுமதி ரூபா 905,337 ஆல் அதிகரிப்பதற்கும் 02 பொறுப்பு மிதிகளின் பெறுமதியை ரூபா 11,499,593 ஆல் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்த போதும் இவ்வேறுபாடு என்னவென்பது திட்டவட்டமாக இனங் காணப்படா திருந்ததுடன் பதிவழிப்பதற்காக எந்த ஒரு அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	கண்டு பழிவழிப்பதற்கு உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

1.7 **<u>இணக்கமின்மைகள்</u>**

1.7.1 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங் களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
	நியதிகள், சாசனங்கள் மற்றும் பிரமாணங்கள்			
(அ)	1946 இன் 30ஆம் இலக்க குத்தகை மற்றும் மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் 20 ஆம் பிரிவு	பிரதேச சபையால் 2017 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட அடிப்படையில் மீளாய்வாண்டில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.	உள்ளூராட்சி மன்ற விடய பொறுப்பு அமைச்சரால் அப்போது நாட்டில் தொற்று நிலைமை காரண மாக வீதவரி மீளமைப்பு மதிப்பீடு பொருத்த மற்றது என குறிப பிடப்பட்டிருந்ததாக	சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1988 இன் 56, 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 (ஆ)பகுதி	சபையினால் பராமரித்து செல்லப்படுகின்ற கழிவுகளை வெளியேற்றப் படும் இடங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் ஒன்று கோரப பட்டுள்ளதாக.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் 14 ஆம் அத்தியாயத்தின் 4.2.3 மற்றும் 4.3, 4.4, 4.4.1 மற்றும்	மரணித்த ஓய்வு பெற்ற வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட சேவை யிலிருந்து நீக்கப்பட்ட சேவையை விட்டுச்	குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ள துடன் அறிக்கை கிடைத்த பின்னர் விரைவில் உரிய	தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை பிரகாரம்

	4.5 பந்திகள் மற்றும் 2019 ஜூலை 27 ஆம் திகதிய திறைசேரி பிரதி செயலாளரின் 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி	சென்ற 48 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 406,145 ஆன கடன் மீதிகள் அறவிடப்பட்டு இருக்கவில்லை.	வர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம்			
(i)	நி.பி 104	சபைக்கு உரிய கெப் வண்டியொன்று 2015 ஏப்ரல் 14 ஆம் திகதி சபையின் தலைவர் பிரயாணித்து கொண்டிருக்கும் போது விபத்துக்கு உட்பட்டு முழுமையாக சேதமடைந்திருந்த போதும் இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு பூரண அறிக்கை ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.	குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அறிக்கை கிடைத்த பின்னர் விரைவில் உரியவர்களிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நி.பி 257	ஒவ்வொரு உறுதிச் சீட்டும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் செலவினம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 9,884,074 ஆன 14 உறுதிச்சீட்டுகளுக்குரியதாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	விடய உத்தியோகத்தரிற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	நி.பி 395(ஈ)	ஒவ்வொரு மாதத்தில் இறுதியில் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்த மாதத்தில் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 12,638,351 ஆன மீதி ஒன்றுக்குரிய 2024 திமெம்பர் மாதம் வங்கி இணக்க கூற்று	தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாக.	உரிய திகதியில் வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.

		தயாரிக்கப்பட்டு 06 மாதங்கள் தாமதித்து கணக்காய்வுக்கு சமர்ப் பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 3,924,177 ஆன மீதிக்குரிய வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.		
(iv)	நி.பி 571 (2)	நிர்மாணங்கள் மற்றும் நானாவித வைப்புக்கள் என குறிப்பிடப்பட்டுள்ள வைப்புக்களின் காலம் 02 ஆண்டுகளை விஞ்சியுள்ள ரூபா 1,463,239 ஆன காலா வதியான 17 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை.	இரண்டு ஆண்டுகளை மிகைத்த வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். .
(ஈ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	07 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்வதாக.	எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	2021 ஏப்ரல் 21 ஆந் திகதிய 2019/02(1) ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி	ரூபா 4,305,519 ஆன நூலகப் புத்தக மீதிகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இனங்காணாமல் கணக்கு குறிப்புகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 20,168,795 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,159,041 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப்ப ட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	10,351,091	10,780,302	7,883,996	5,746,709	10,351,091	9,300,151	8,086,473	2,850,403
(ii)	வாடகை	34,127,174	17,067,532	17,881,350	11,602,478	34,469,004	14,194,996	15,524,102	12,416,296
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங் கள்	2,249,250	2,999,895	3,123,918	1,029,760	2,222,500	2,442,490	2,310,120	1,153,783
(iv)	ஏனைய வருமானம்	10,732,385	10,956,589	16,097,172	1,354,677	11,126,145	9,486,450	8,147,476	6,495,260
		-------------	-------------	-------------	-------------	--------------	-------------	-------------	-------------
	மொத்தம்	57,459,900	41,804,318	44,986,436	19,733,624	58,168,740	35,424,087	34,068,171	22,915,742
		=======	=======	=======	=======	========	=======	=======	=======

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீத வரி		
மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி ரூபா 4,478,376 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் அதில் 29 சதவீதம் அதாவது ரூபா. 1,321,219 தொகை மற்றும் மீளாய்வாண்டுக்குரிய பட்டியலிடப்பட்ட வருமானமான ரூபா 8,277,836 இல் அறவிடப்பட்ட அளவு 69 சதவீதமாக இருந்தது. வீதவரி கொடுப்பனவு தவிர்ப்பு தொடர்பாக 2020 நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக 287 ஆம்	பல்வேறு சட்ட சிக்கல்கள் காரணமாக எதிர்வரும் மேற்கொள்ள முடியாதிருப்பதாக	2020 நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் .

	இலக்க விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத காரணமாக வீத வரி நிலுவை பாரிய பெறுமதி வரை அதிகரித்திருந்தது		

(ஆ) வாடகை

(i)	. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 முதல் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அளவிடுவதற்கு காணப்பட்ட 191 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை மீதி ரூபா. 6,087,545 ஆக இருந்தது எடுத்தல் வேண்டும்	நிலுவைத் தொகை உள்ளவர்களிடமிருந்து கடைகள் முத்திரை இடப்பட்டு சபைக்கு கையேற்கப்பட்டு நிலுவைகளை அற விடுவதற்காக நீதிமன்றத்திற்கு அறிக்கை விடுவதற்கு குறித்துக் கொண்டு உள்ளதாக.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை காலப் பகுதிக்குரிய வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதன் மூலம் அறவிடப்பட வேண்டிய நிலுவை மீ;தி ரூபா. 5,515,593 ஆக இருந்ததுடன் மீலாய்வாண்டின் போது உரிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பரிசோதனை குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளதாகவும் அறிக்கையின் பிரகாரம் அந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.·.
(iii)	பொலன்னறுவ கட்டியெழுப்புதல் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்கி அறவிடப்பட வேண்டிய ரூபா 3,122,898 குறித்த செயற்திட்டம் முடிவடைந்து 02 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பரிசோதனை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது அறிக்கையின் பிரகாரம் அந்நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.·.	நிலுவை வருமானத்தை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) அனுமதி பத்திர கட்டணங்கள்

	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதி பத்திர கட்டணங்கள் முறையே ரூபா. 332,550 ரூபா. 493,350 மற்றும் ரூபா. 203,860 தொகையை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	அதிக அளவிலான வியாபாரங்கள் மூடப் பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் முறையாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு அல்லது முறையாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ) ஏனைய வருமானங்கள்

(i)	மீலாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த மல அகற்றக் கட்டணம் ரூபா. 382,860,	நிலுவையை அறவிடக்கூடிய தொகை அறவிடுவதற்கும்	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு

	நிலுவை நீர் கட்டணம் ரூபா. 839,665 மற்றும் நிலுவை கழிவு பொருள் வரி ரூபா. 136,152 என ரூபா. 1,358,677 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	ஏனையவற்றிற்காக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதாக.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 52,417,397 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா. 31,454,267 ஆக இருந்தது.	நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
உப உறுப்புரை		
பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 23 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் தேதி வரை 8 பிரதான விடயங்களுக்காக உப உறுப்புரை பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக.	பிரதான விடயங்களுக்காக உப உறுப்புரை பிறப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிபிதெமு பொலன்னறுவை செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஹிங்குரக்கொட பொதுச் சந்தை வியாபார கடைத் தொகுதியில் 65 கடைகளில் 35 கடைகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் தேதி வரையிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட பயனடைவோர் மூலம் திறக்கப்படாது இருந்ததுடன் உடன்படிக்கை பிரகாரம் சபையால் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டில் முத்திரை இடுவதற்கும் மற்றும் கடைகளை கையேற்பதற்கும் ஆளுநரின் அறிவுரையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப் பட்டதாகவும் 02 கடைகள் தவிர ஏனைய கடைகளை திறப்பதற்கு உள்ளதாக	கடைகளை உடன்படிக்கை பிரகாரம் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	சுடலைசாலை பொறுப்பாளரால் முன்னைய ஆண்டுகளுக்குரிய சுடலை சாலையில் தகனம் செய்யப்பட்ட 8 சடலங்களுக்குரிய ரூபா. 76,000 ஆன வருமானம் ஒன்று சபைக்கு கொடுபபனவு செய்யப்படாமை மற்றும் 2021 ஏப்ரல் 07 திகதி 10 எரிவாயு சிலிண்டர்கள் கொள்வனவு செய்ததாக தனியார் நிறுவனம் இருந்து பெற்றுக் கொண்ட ரூபா. 62,310 ஆன போலி பட்டியல் சமர்ப்பித்தமை தொடர்பாக மீலாய்வாண்டின் போதும் ஒழுங்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	பரிசோதனை நடவடிக்கைகள் உள்ளூராட்சி மன்றத் திணைக்களததினால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் மேற்கொள்வதாக.	பரிசோதனை நடவடிக்கைகளை விரைவில் மேற்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	வாகன காப்புறுதிக்காக ரூபா. 34,795,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ஆவணங்கள் மற்றும் இயந்திரங்கள் 05 பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளில் சீராக்கம் செய்வதாக.	மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	அதிகார பிரதேசத்தில் உருவாகும் கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்காக பிரதேச சபைக்கு 25 ஏக்கர் காணித் துண்டு ஹிங்குரக்கொட பிரதேச செயலாளரால் ரோட்டாவே கிராம சேவையாளர் பிரிவில் 2019 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்த போதும் உரிய அரச நிறுவனத்துடன் நடவடிக்கை எடுத்து அக்கணியை தீர்வு செய்வதற்கும் முறையாக திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவ நடைமுறை ஒன்றை நிறுவுவதற்கும் மீலாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	ரொட்டவெவ கழிவு பொருள் வெளியேற்றப்படும் காணி எமது சபைக்கு வழங்கப்படவில்லை என்பதாக.	முறையான திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவ நடைமுறை ஒன்று நிறுவப்படல் வேண்டும்.
(உ)	பொது நிர்வாக, உள்நாட்டு அலுவலக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் மூலம் 2024 மே மாதம் வெளியிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்ற வழிகாட்டல் சுற்றறிக்கை இலக்கம் 01 இன் 5.2.3 பிரகாரம் திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவத்துக்காக முறைப்படி பிரிவொன்று சபைக்கு என உருவாக்காமல் வாகனத் தொகுதியில் உக்காத கழிவுகளை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் வழிகாட்டல் கோவையின் 5.2.3.1 (V) பிரகாரம் உக்கும் கழிவுப்பொருட்களை பயன்படுத்தி சேதன பசளைஉற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய போதிலும் சபையின் மூலம் சேதிக்கப்படுகின்ற உக்கும் கழிவுகளை பயன்படுத்தி சேதனப் பசலைகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	செயற்பாட்டை மேற்கொள்வதற்காக தற்போது வேறொரு இடம் ஒன்று இல்லாததால் தற்காலிகமாக கழிவு பொருள் சேகரிக்கும் நிலையமாக இது பயன்படுத்தப்படுகின்றது.	திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவ பிரிவொன்று நிறுவப்பட வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான உடைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ரூபா. 79,777,050 பெறுமதியான சபைக்கு சொந்தமான 03 கட்டிடங்கள் மற்றும் 07 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டன.	வேண்டுகோள் இல்லாததன் அடிப்படையில் உத்தியோகபூர்வ இல்லம் குறை பயன்பாட்டிற்கும் உட்பட்டிருந்ததுடன் வாகனங்களை திருத்தி பயன் பாட்டுக்கு எடுப்ப தற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ரூபா 27.15 மில்லியன் செலவிடப்பட்டு பிபிதெமு பொலன்னறுவ மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ஹிங்குரக்கொட பொது வியாபார சந்தையை வாடகைக்கு வழங்குவ தற்காக கேள்வி நடைமுறையில் இருந்து விலகி தலைவர் மற்றும் சபையால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் காரணமாக வாடகை பெற்றுக் கொள்வது தாமதத்தின் பேரில் 05 ஆண்டுகளுக்கு அண்தித்த காலமாக விளைவற்று காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் மதிப்பீட்டு வாடகை அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு முதல் சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா. 37,301,600 ஆக இருந்தது.	பிபிதெமு பொலன்னறுவ மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தினால் கட்டியெழுப்பி நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டு சந்தர்ப்பத்தில் முழுமையற்ற வேலை பகுதிகள் பல இருந்ததுடன் கடைகளை வழங்கியதன் பின் முன்னர் இணக்கப்பாடுகளில் சிக்கல்கள் காணப்பட்டதாக.	கடைகளில் உள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்து வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் 38 நிறுத்தி வைப்பதற்காக பாதுகாப்பு மேவுகளில் காணப்படவில்லை வாகன தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை	வாகன தொகுதி ஒன்று நிர்மாணிக்கப் பட உள்ளதாக.	வாகன தொகுதி யொன்று நிர்மாணிக் கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	சபைக்கு சொந்தமான ஓட்டத்தில் ஈடுபடுத்தாமலும் மற்றும் திருத்த மட்டத்திலும் காணப்படுகின்ற 7 வாகனங்கள், இயந்திரங்கள் தொடர்பாக	எதிர்காலத்தில் தேவையான	வாகனங்கள் மற்றும் பாகங்களை திருத்தி

திருத்த நடவடிக்கைகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தாமதமாக இருந்தது.	நடவடிக்கைகளை மேற்கொள்வதாக.	பயன்பாட்டிற்கு வேண்டும்.

3.5 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் செயலாளர் பதவி 05 ஆண்டுகளாக வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப்பதவி செயலாளரால் பதில் கடமை அடிப்படையில் மேற்பார்வை செய்யப்பட்டு வந்தது.	மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாக.	வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் சபையில் 02 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 03 நூலகர் பதவிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி ஒன்றும், 02 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் பதவிகளும், சந்தை மேற்பார்வையாளர் பதவியொன்றும் வேலை / வெளிக்கள மேற்பார்வை பதவியொன்று, சுகாதார மேற்பார்வை பதவி, 07 சாரதி பதவிகள், பார இயந்திர செயற்பாட்டாளர் பதவி, 03 காவலாளி பதவிகள், 03 நீர் தொழிலாளர் பதவிகள், விளையாட்டரங்கு காப்பாளர் பதவியொன்றிலும் 03 சுகாதார தொழிலாளர் பதவிகள் என 29 வெற்றிடங்கள் காணப்பட்டதால் சபையின் நடவடிக்கைகள் முறையாக செயற்திறனாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.	வெற்றிடங்கள் தொடர்பாக மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக.	வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2015 மார்ச் 18 ஆம் திகதி 4/2015 ஆம் இலக்க வடமத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 1.3 இன் பிரகாரம் சபையினால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு மாத இறுதியில் பொதுச்சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் காலாண்டுக்கு ஒரு முறை மாத்திரம்	எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக.	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படாமல் இருந்ததுடன் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரிற்கு கணக்காய்வு கடமைகளுக்கு மேலதிகமாக கொடுப்பனவு உறுதி சீட்டுகளை பரீட்சிக்கும் கடமையும் கையளிக்கப்பட்டு இருந்தது.

4.2 பாதிட்டு கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	மீளாய்வாண்டில் சபையில் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்துடன் பரீட்சிக்கும் போது 05 வருமான விடயங்களில் 15 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான விலகல் ஒன்று அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	ஏற்றுக் கொள்வதாக.	பாதீட்டு அறிக்கை ஆக்கபூர்வமான நிதி வழிகாட்டல் ஒன்றாக பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	வருடாந்த பாதீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 5,800,000 பெறுமதியான 05 செயற் திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப் பட்டு இருக்கவில்லை.	மதிப்பீடு அங்கீகரிக்கப்படாமல் 2025 ஆம் ஆண்டில் பாதீடு அறிக்கை களும் இந்த செயற்திட்டங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளதாக.	திட்டமிடப்பட்ட செயற் திட்டங்களை உரிய ஆண்டில் செயற் படுத்தப்பட வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் பிரதேச சபையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிகழ்ச்சிகள் மற்றும் நியதிகள் இனங்கண்டு செயற்படுத்தல் இடம்பெற்றிருருக்கவில்லை.	நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக் கப்பட்டுள்ளதாக.	சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மங்ஞம் நிகழ்ச்சிகளுக்குரிய பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.